



# மன்னார்குடி இராஜகோபாலஸ்வாமி அருளால் புகழ் பெற்றேன்!

**மாடித் தோட்டத்தில் அசத்தும் தெய்வானை!**



மதுரை காமராசர் சாலை வெங்கடபதி ஐய்யங்கார் தெருவில் தனது இல்ல மொட்டை மாடியில் 'ஆர்கானிக்' முறையில் 'மாடித் தோட்டம்' அமைத்து, வீட்டு சமையலுக்கு தேவையான காய்கறிகளை பயிரிட்டு தனது இல்ல சமையல் தேவைகளுக்கு பெற்றுவரும் தெய்வானை எம்.எஸ்.சி விவசாய பட்டதாரியாகவும், சுற்றுச்சூழல் பற்றி Ph.D செய்து வருபவராகவும் திகழ்கிறார்.

இவர் 'சாய்கிரீன்' என்று துவங்கி தனது மாடி தோட்டத்தில் கிடைக்கும் விதைகள், மற்றும் தாவரங்களை விவசாயிகளுக்கும் வெளிநாட்டின ருக்கும் அனுப்பிவருகிறார். 'சாய் அகாடமி' துவங்கி கல்லூரி மாணவர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சியும் தந்துவருகிறார்.

இந்த சாதனை பெண்மணி தெய்வானை தனது கணவரும், வணிகவியல் பேராசிரியருமான சிவபிரகாஷ் மற்றும் குடும்பத்தின ருடன் பூஜையறையில் இருந்தபோது அவரை சந்தித்தோம். நம்மை அன்புடன் வரவேற்ற தெய்வானை தங்கள் குலதெய்வமான மன்னார்குடி இராஜகோபாலஸ்வாமியின் அற்புத சக்தி பற்றி கூறினார்.

"பல நூற்றாண்டுகளுக்குமுன்பு 'ராஜ மன்னார்குடி' என்று அழைக்கப்படும் மன்னார்குடி இராஜகோபாலஸ்வாமி திருக்கோவில் பக்தர்களின் வேண்டுதல்கள் அனைத்தையும் நிறைவேற்றி பிரார்த்தனைகளை ஏற்று அருள்பாலித்துவரும் அபூர்வ சக்திகள் வாய்ந்த திருக்கோவில் ஆகும். 23 ஏக்கர் பரப்பளவில் எழுச்சியுடன் இருந்துவரும் இக்கோவில் குலோத்துங்கச் சோழனால் அமைக்கப்பட்டது. இராஜகோபால ஸ்வாமியை கிருஷ்ண பரமாத்மாவின் வடிவில் தரிசித்து வேண்டிவரும் பக்தர்கள் வேதனைகள் தீர்ந்து சாதனைகள் புரியும் அளவு சந்தோஷம் அடைந்து வருகிறார்கள்.

இந்தக் கோவிலின் ஸ்ரீ வித்யா செங்கமலத் தாயாரை பெண்கள் வழிபட்டு பெரும் முன்னேற்றத்தை வாழ்வில் பெற்றுவருகிறார்கள்.



ஆண்டு முழுக்க பல்வேறு விழாக்கள், திருத்தேர் பவனி ஆகியவற்றை பக்தர்கள் பல ஆயிரம் சூழ இத்திருக்கோவிலில் நடந்து வருவது குறிப்பிடத்தக்க ஆன்மிக அன்பர்கள் மனம்குளிர வைக்கும் விஷயமாகும்.

நாங்கள் எங்கள் மகன் சேஷன், மகள்கள் அருணா, இந்து, மாமியார்-மாமனாருடன் வருடம் ஒருமுறையாவது எங்களை வாழ வைத்துவரும் குலதெய்வமான மன்னார்குடி இராஜ கோபாலஸ்வாமி திருக்கோவில் சென்று வழிபட்டுவர தவறுவதில்லை. இந்த குலதெய்வம் அருளால் நான் 'மாடித்தோட்டம்' அமைத்து மகத்தான பெயர், புகழ், மக்கள் வரவேற்பு பெற்றுவருகிறேன். எல்லா புகழும் எங்கள் குலதெய்வத்தையே சாரும்.



நான் ஆர்கானிக் மாடிதோட்டத்தை விரும்பிவந்து கேட்பவர்களுக்கும் அமைத்து தருகிறேன். விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் விதைகள் தாவரங்களை தபால், கொரியர் மூலம் தந்துவருகிறேன்.

மாடிதோட்டம் 'பிரைமரி கேர் ஹாஸ்பிடல்' ஆகவும் இருக்கிறது. காய்ச்சல், சளி போன்றவற்றுக்கு பப்பாளி இலை, துளசி இலை கஷாயம் நல்ல பூரண குணம் தருகிறது.

'தொழில் முனைவோர்' பயிற்சியை கல்லூரிகளுக்கு சென்று மாணவ- மாணவிகளுக்கு அளிக்க தயாராக இருக்கிறேன்."

தெய்வானையின் லட்சியங்கள் நிறைவேற வாழ்த்தி விடைபெற்றோம். தெய்வானை கைபேசி எண்: 93821 32593.

பேட்டி, படங்கள்: **விஜயாகண்ணன்**